முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1160

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.12.2022, வெள்ளிக்கிழமை

1. தயவே வடிவாக கலியினில் அவதரித்து
தவராஜனாக உலக மக்களுக்கு அருள்புரிகின்ற
தயாபரனே ஆறுமுக அரங்கனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி தன்னை
உரைத்திடுவேன் சுபகிருது தேள் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 16 ம் நாள் 02.12.2022, வெள்ளிக்கிழமை)
ஞானவான்களை உலகமெங்கும் நிரப்ப
ஞானக்குடில் படைத்த அரங்கனே
3. அரங்கனே உன் சொல்லும் செயலும்
உலகோர்க்கு நல்வேதமாக வழி நடத்தும் ஞானமாக இறங்கி அருளும்
வல்லமைகொண்டு உன்னை வணங்கி வரும் மக்களுக்கு
வரங்கள் பஞ்சமின்றி மிகுந்து இனிதே
4. இனிதே அவர்கள் வாழ்வு புனிதமடைவதோடு
இனி பிறவாத பெரும்பேற்றை தந்தருளும்
கனிவேலவன் என் வழிபாட்டை உலகமெங்கும்
கருணைவடிவாக இறக்கி அருள் புரிகின்ற அரங்கனே
5. அரங்கனே உன்மூலம் என் வெளிப்பாடு
கலியுகத்தில் எங்கும் உறுதியாகி
அழியாமை பெறக்கூடிய மக்கள் படைகளாக
அரங்கன் உன்னால் உலகோர் ஆக்கம் பெறக்கூடும்
6. கூடவே இந்த அற்புதத்தை நீ
குவலயத்தை நோக்கி ஞானமாக வழங்கி வருவதாலே
நாடெங்கிலும் உன்வழி நானே வெளிப்படுவேன்
நன்மை கருதி உலகமெங்கும் அன்னதான சேவை
7. சேவைதனை வளரச்செய்து ஆறுமுகன் யான்
சித்தியாக உன் தொண்டர்கள் வழி
இத்தரையில் ஞான ஆட்சியில் ஞானிகளாக
உலகோர் மாற உண்டான அற்புதமும் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–